**OPEN ACCESS**

Volume: 4

Issue: 4

Month: April

Year: 2020

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 27.2.2020

Accepted: 13.3.2020

Published: 01.04.2020

Citation:
Gukan, K. (2020). The Concept of Beauty in Periyapuranam. *Shanlax International Journal of Tamil Research*, 4(4), 121–130.

DOI:
https://doi.org/10.34293/tamil.v4i4.3165

*Corresponding Author:
kugan299@yahoo.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# The Concept of Beauty in Periyapuranam

**Kopalappillai Gukan***

*Lecturer, Department of Languages, Eastern University, Sri Lanka*

https://orcid.org/0000-0002-0768-9811

**Abstract** – Sekkizhar composed Periyapuranam to exhibit greatness of Saivism and guide the people and king who has eagerly immersed in the themes of aham (love affairs) expressed in the kavyam of Civakacintamani. Therefore, there is no theme of love affairs beautifying songs of the Periyapuranam as in the case of Cintamani. However, there is a humble beauty in the Periyapuranam and the beauty is nothing but portrayal of beautiful elements of physical appearances of Saiva saints.

The Periyapuranam which speaks Saiva saints portrays beauty of the saints. Periyapuranam comprises of lives of saints who are unequal in caste and economical hierarchy. The research paper studies how much Periyapuranam gives importance to exhibit beauty of the saints and in which manner the beauty of saints is articulated by Periyapuranam.

The research paper reveals that Periyapuranam depicts modest beauty of physical appearances of Saiva saints with holy ash, rutratcam, holy thread, matted hair, white dress and shred dress. Besides, Periyapuranam shows that forms of mahamuni and ghost are conceived as the extra ordinary forms which can reach the God. Further, Periyapuranam tries to bring beauty of physical appearances of the orthodox saints in a kind of structure in view of competition between orthodox and heterodox system.

**Key Words:** Siva literature, Tamil epic, Sekkizhar, Periyapuranam, Beauty, Physical apperrance, God.

## Referances

1. Kaiyasapathy K. (1996). "*Pulaippadiyum Kopura Vasalum*", *Adiyum Mudiyum – Ilakkiyathil Karuththukkal*. Chennai, Kumaran Publisers.
2. Manonmani Sanmugadas. (2010). Laleesan, *Periyapuranam Kaddum Vazhviyal*. Colombo – Chennai:Kumaran Book House.
3. Nadarajan, T.S. (2016). *Thamil Azhakiyal, Marapum Kodpadum*, Chennai. Paavai Prinders.
4. Nampi Aaruran. K. (1994). *"Tharasuraththilulla Periyapurana Sitpankal: Oor Aaivu", avvai Nadarajan, Thamil Kalai Virunthu*. Thanjavur: Thamil Palkalaikkazhakam.
5. Pilaventhiran S. (2001). Thamil Sinthanai Marapu, Chennai: Luxmy Suntharam.
6. Premkumar Ratnasabapathy. (2013). W*estern Aesthetics, from Plato to Nietzsche*. Colombo: Kumaran Book House.
7. Ramasuppiramaniyam, V.T. (2002), *Periyapuranam (volume:1,2,3&4),* Thirumakal Nilaiyam, Chennai.
8. Santhiraleka Vamatheva. (1998). *"Karaikkalammaiyarum Avar Padiya Pirapanthankalum – Or aaivu" (Sinthanai: volume – 3, Ithazh – 1)*, Faculty of Arts, University of Jaffna.
9. Thilakavathy. (2004). *"Thamil Ilakkiyaththil Pen",* A.S. Mani, Ilakkiya Kadduraikal, Chennai, Paavai Publisers.
10. Vaiyapurippillai, S. (1957). Kaaviya Kaalam, Mathurai.
11. Vellaivaranan. (1969). *Panniru thirumurai Varalaru (Erandam Pakuthi)*. Anna Palkalaikkazhakam,

# பெரியபுராணம் காட்டும் அழகு

***கோபாலப்பிள்ளை குகன்***
விரிவுரையாளர், மொழித்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், ஸ்ரீலங்கா

***ஆய்வுச் சுருக்கம்*** – *சைவ மதத்தின் மகத்துவத்தை வெளிப்படுத்தவும், சீவகசிந்தமணி காவியத்தில் வெளிப்படுத்தப்பட்ட அஹாம் (காதல் விவகாரங்கள்) கருப்பொருள்களில் ஆவலுடன் மூழ்கியிருக்கும் மக்களுக்கும் அரசருக்கும் வழிகாட்டும் விதமாக சேக்கிழார் பெரியபுராணத்தை இயற்றினார். எனவே, சிந்தாமணியைப் போலவே பெரியபுராணத்தில் பாடல்களை அழகுபடுத்தும் காதல் விவகாரங்கள் எதுவும் இல்லை. இருப்பினும், பெரியபுராணத்தில் ஒரு அடக்கமான அழகு உள்ளது மற்றும் அழகு என்பது சைவ புனிதர்களின் உடல் தோற்றங்களின் அழகிய கூறுகளை சித்தரிப்பதைத் தவிர வேறில்லை. சைவ புனிதர்களைப் பற்றி பேசும் பெரியபுராணம் புனிதர்களின் அழகை சித்தரிக்கிறது. பெரியபுரணம் சாதி மற்றும் பொருளாதார வரிசைக்கு சமமற்ற புனிதர்களின் வாழ்க்கையை உள்ளடக்கியது. புனிதர்களின் அழகை வெளிப்படுத்த பெரியபுராணம் எவ்வளவு முக்கியத்துவம் அளிக்கிறது என்பதையும், புனிதர்களின் அழகு எந்த விதத்தில் பெரியபுராணத்தால் வெளிப்படுத்தப்படுகிறது என்பதையும் ஆய்வுக் கட்டுரை ஆய்வு செய்கிறது. திருநீரு, ருத்ராட்சம், புனித கயிறு, கூந்தல் நீக்கிய தலை, வெள்ளை உடை மற்றும் குறைந்தபட்ச ஆடை ஆகியவற்றைக் கொண்டு சைவ புனிதர்களின் உடல் தோற்றத்தின் எளிமையான அழகை பெரியபுராணம் சித்தரிக்கிறது என்று ஆய்வுக் கட்டுரை வெளிப்படுத்துகிறது. தவிர, மகாமுனி மற்றும் பேயின் வடிவங்கள் கடவுளை அடையக்கூடிய கூடுதல் வடிவங்களாக கருதப்படுகின்றன என்பதை பெரியபுரணம் காட்டுகிறது. மேலும், மரபுவழி மற்றும் பரம்பரை முறைக்கு இடையிலான போட்டியைக் கருத்தில் கொண்டு பழமையான புனிதர்களின் உடல் தோற்றங்களின் அழகை ஒரு வகையான கட்டமைப்பில் கொண்டு வர பெரியபுராணம் முயற்சிக்கிறது.*

***முக்கியச் சொற்கள்:*** *சிவா இலக்கியம், தமிழ் காவியம், சேக்கிழார், பெரியபுராணம், அழகு, உடல் தோற்றம், கடவுள்*

சீவக சிந்தாமணி என்ற சமண சமயக் காப்பியத்தில் அகப்பொருள் விடயங்கள் அதிகம் இடம்பெறுகின்றன. இவற்றால் கவரப்பட்ட மன்னனுக்குச் சைவத்தின் பெருமையைப் புலப்படுத்தவும் அவனை நல்வழிப்படுத்தவும் அமைச்சராக இருந்த சேக்கிழார் பெரிய புராணத்தைப் பாடினார் என்பது வரலாறு. இதனால் சிந்தாமணிக் கவிதைகளுக்கு அழகு தருகின்ற சிற்றின்பப் பகுதிகளோ சிருங்கார ரஸமோ பெரிய புராணத்தில் இல்லை. ஆனால் ஆடம்பரமில்லாத அழகு அதன்கண் உள்ளது (1957:241). பெரியபுராணத்தின் அழகு தொடர்பாக எஸ். வையாபுரிப்பிள்ளை முன்வைக்கும் இக்கருத்து பெரியபுராணத்தில் சித்திரிக்கப்படும் அடியார்களின் உடலழகு பற்றியது என்பது தெளிவாகும். பழந்தமிழ் இலக்கியங்களின் கவிதை அழகியல் பற்றி ஆய்வுகள் நடைபெற்றுள்ளனவெனினும் அவ்விலக்கியங்களில் வருகின்ற பாத்திரங்களின் உடலழகு பற்றிக் கவனம் செலுத்தப்படவில்லை. அத்தகைய தேடல்கள் ஆரம்பிக்கும்போது அவ்விலக்கியங்கள் தோன்றிய சமூகப் பின்னணி மேலும் தெளிவு பெறுவதற்கு

வாய்ப்புக்கள் உள்ளன. முக்கியமாக இலக்கியங்களில் வருகின்ற பாத்திரங்களின் உடலழகு எவ்வாறு வர்ணிக்கப்படுகின்றது? அதன்அடிப்படைகள்யாவை?அவற்றுக்கும் இலக்கியம் தோன்றிய நோக்கத்திற்கும் தொடர்புள்ளதா?என்பனபோன்றநுணுக்கமான ஆய்வுகள் அவசியமாகும். அவ்வகையில் பெரியபுராணத்தில்வருகின்றபாத்திரங்களின் உடலழகு பற்றியதாக இவ்வாய்வு அமைகிறது. அடியவர் வேடத்தில் சிவசொரூபத்தைக் கண்டு வழிபடும் அடியார் வழிபாட்டை பெரியபுராணம் சிறப்பித்துப் பாடுகின்றது. அதில் கூறப்படுகின்ற அடியார்களை அடிப்படையில் அரசர், அந்தணர், வணிகர், வேளாளர், ஆதிசைவர், திருநீலகண்டர், வேடர், இடையர், வண்ணார், பரதவர், சாலியர், பாணர், பறையர், சான்றார், மாமாத்திரர் மற்றும் மரபு தெரியாதவர் என்றுஅடையாளங்காணலாம்.இவர்களுள் ஆண், பெண் இரு பாலாரும் அடங்குவர். சிவதொண்டர்கள் என்ற அடிப்படையிலும் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டவர்கள் என்ற அடிப்படையிலும் இவர்கள் அனைவரும் ஒரே தளத்தினரே.

பெரியபுராணச் சிற்பங்களில் காணப்படுகின்ற அடியார்கள் அனைவரினதும் உடல் தோற்றத்தில் பெரும்பாலும் பொதுவான அம்சங்கள் காணப்படுவதற்கு இதுவும் ஒரு காரணமாகலாம். இதனாலேயே சிற்பங்களிலும் ஓவியங்களிலும் சித்திரிக்கப்பட்டிருக்கும் அடியார்களை அடையாளம் காண்பதில் ஆளுக்காள் வேறுபடுகின்றனர். குறிபாக தாராசுரம் சிற்பம் தொடர்பாக இத்தகைய நிலைமையுண்டு. ஆகவே, அவை இயல்பான உடல் தோற்றங்கள் அல்ல என்பது விளங்கும்.

இயல்பு மீறிய மனித உடலின் மூலம்தான் தெய்வத்துடன் தொடர்பு கொள்வது சாத்தியம் என்பதைத் தமிழ்ச் சிந்தனை மரபினூடாக அறியலாம் (ச. பிலவேந்திரன், 2001:84-104). ஆயினும் இறைவனால் ஆட்கொள்ளப்படுவதற்கு முன் வெவ்வேறு விதமான சாதாரண வாழ்க்கை வாழ்ந்தவர்களே பெரியபுராணம் சித்திரிக்கின்ற அடியார்கள். பெரியபுராணம் அவர்களுடைய வாழ்வியலைக் கூறுகின்றது என்றால் அவர்களது உடலழகும் அதில் உள்ளடங்கியிருக்கும் என்பது சாதாரண விடயமாகும். இந்நிலையில் வெவ்வேறு தளத்தினரான அடியார்களின் இயல்பான உடலழகினை வெளிப்படுத்துவதற்குப் பெரியபுராணம் எந்தளவு முக்கியத்துவம் கொடுக்கிறது என்பது பற்றியும் எப்படி வெளிப்படுத்துகின்றது என்பது பற்றியும் அவதானிப்பது அவசியமாகின்றது.

அழகு என்பது பொருளின் பண்பு மட்டுமன்றி காண்பவரின் மனவுணர்வையும் சார்ந்ததாகும். அது இயங்கியல் சார்ந்த ஓர் மனிதப் பண்பாட்டு நிலையாக உள்ளது. வெவ்வேறு பண்பாட்டுச் சூழமைவுகளிலும் சமூக வரலாற்று நிலைகளிலும் தனிச் சிறப்பியலான கூறுகளுடன் அழகியல் புலப்பட்டு நிற்கும் என்பதால் அவ்வப் பண்பாடுகளையும் கலை இலக்கியங்களையும் சார்ந்தே அவ்வழகியலைப் புரிந்துகொள்ள வேண்டும். இவ்வடிப்படையில் "தமிழ் அழகியல் கோட்பாடு" கட்டமைக்கப் பட்டிருக்கின்றது (தி.சு.நடராசன், 2016). தமிழில் அழகு என்ற பொதுவான பொருண்மையில் அதனுடைய பல நிலைகளையும் பண்புகளையும் காட்டுகின்ற விதத்தில் திரு, அம், அணி, எழில், ஏர், முருகு, நோக்கு, கவின், ஐ, காமர், தகை, மதன், மைந்து, மா, பொற்பு, பொலிவு, வனப்பு, சீர், வடிவு, கோலம், வண்ணம், நலம் ஆகிய சொற்கள் சங்க காலம் முதல் வழங்கி வருகின்றன. இவற்றில் "நலன்" என்ற சொல் நல்லதாக - நிறைவாக - கவர்ச்சியாக - ஒன்றினை அடையாளங் காட்டுவதாக இருத்தல் என்னும் பொருளில் சங்கப் பாடல்கள் பலவற்றில் அழகினைக் குறித்து வருகின்றது.

அழகியல் குறித்து வரும் பிற சொற்கள் போலல்லாமல் இச்சொல் உடலழகைச் சார்ந்து மட்டுமே வருகின்றது. மனிதரின் உடலழகு என்பது ஒருவரையொருவர் நெருங்கியிருப்பதற்கான உணர்வுபூர்வமான சாதனங்களில் முக்கியமான ஒன்றாகும். அவனுடைய அல்லது அவளுடைய ஒட்டு மொத்த ஆளுமையின் வெளிப்பாடாகவும் அம்மனிதரிடம் உள்ளார்ந்தும் வெளிப்பட்டும் தோன்றுகின்ற நுண்மை சார்ந்த பண்பாகவும் இது அமைகின்றது (தி.சு.நடராசன், 2016:121). இவ்வகையில் பெரியபுராணத்தில் வருகின்ற அடியார்களின் இயல்பான உடல் நலத்தினை, உடலழகினை எடுத்துக்காட்ட முனைவது, மனிதர்களின் இயல்பான உடலழகினைச் சித்திரிப்பது தொடர்பில் சேக்கிழார் கொண்டிருந்த கொள்கையை அறிந்துகொள்ளவும் தமிழ் அழகியல் கோட்பாட்டை மேலும் கட்டமைக்கவும் உகந்ததாகும்.

பெரியபுராணத்தில் 63 தனியடியார்களினதும் 9 தொகையடியார்களினதும் வரலாறு சொல்லப்பட்டுள்ளது. இதில் ஆண், பெண் என்ற இரு பாலாரும் அடங்குவர். தவிர, இவர்களின் வாழ்க்கையோடு தொடர்புபட்ட மனைவி, கணவன், குழந்தை போன்றோர் பற்றியும் அடியார்களை ஆட்கொள்வதற்காக மனித உருவில் வந்த சிவபிரான் பற்றியும் பெரியபுராணம் குறிப்பிடுகின்றது.

உலகியல் வாழ்க்கையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் சுந்தரரைத் தடுத்து அடிமை கொள்ளும் வகையில் வேதியர் உருவத்தில் வந்த சிவபெருமானின் உடல் அழகு பற்றிப் பாடிய சேக்கிழார்,

> **"மொய்த்துவளர் பேரழகு மூத்தவடி வேயோ**
> **அத்தகைய மூப்பு எனும் அதன்படிவ மேயோ**
> **மெய்த்த நெறி வைதிகம் விளைந்த முதலேயோ**
> **இத்தகைய வேடம்"** *(178:1-4)*

என்று ஐயம் கொள்ளுமாறு தோன்றினார் எனப்பாடுகின்றார். அத்தோற்றம் ஒளி திகழும் கண், நெற்றியில் வெண்மையான படம் போன்ற ஆடையென விளங்கும் திருநீறு, முற்றிய கதிர் சாய்வது போன்று வெண்மையான நரைமுடியென முடிக்கப்பெற்றுத் தளர்ந்து அசையும் தலைமுடி, காதில் உருத் திராட்சத்தால் வடிக்கப்பட்ட குழை, சுடர் விடும் மார்பில் மின்னும் முப்புரி நூல், தோளின் மீது சாத்திய வெண்மையான மேலாடை, கையில் வெயிலை மறைக்கும் குடை, வயிற்றினின்றும் சரிந்த கோவண உடையின் மீது பழைமை மிகுந்த ஆடை, வெண்மையான மெல்லிய உடை, கையில் தருப்பைப் புல் முடிந்த மூங்கில் தண்டு, கால்கள் தள்ளாடும் நடை ஆகியவற்றோடு காட்சியளித்தது. இவ்வாறு தோன்றிய வடிவத்தையே பேரழகு யாவும் ஒன்று சேர்ந்து முற்றிய வடிவமோ எனவும், அத்தகைய மூப்புக்கு வடிவம் இது தானோ எனவும், வைதிகம் தனது உண்மைக் கொள்கை காட்ட விளைந்த வடிவமோ எனவும் சந்தேகங்கொள்ளுமாறு காணப்பட்டது என்று சேக்கிழார் பாடுகின்றார். இங்கு உடலழகு தொடர்பில் வைதிகம் தனது உண்மைக் கொள்கையைக் காட்டுதல் என்ற விடயம் பெரியபுராணத்ினூடாக மேற்கிளம்புவதைக் காணலாம். அத்தகைய உடலழகைப் பேரழகாகவும் முதிர்ந்த வடிவமாகவும் எளிமையான வடிவமாகவும் காட்ட விளைவதையும் கவனத்தில்கொள்ள வேண்டும்.

திருக்கூட்டத்தில் உள்ள அடியார்களின் உடல் அழகு பற்றிப் பாடும் சேக்கிழார் "வேண்டுமாறு விருப்புறும் வேடத்தர்" *(145:1)* என்று குறிப்பிடுகின்றார். ஆயினும் திருநீறும் உருத்திராட்சமும் கந்தையான ஆடையும் அணிந்த புனிதர்களாகவே அவர்கள் சித்திரிக்கப்படுகின்றனர்.

**"மாசிலாத மணிதிகழ் மேனிமேல்
பூசும் நீறுபோல் உள்ளும் புனிதர்கள்"**

***(141:1-2)***

குற்றமற்ற உருத்திராட்ச மணியைத் தரித்து விளங்கும் திருமேனியில் விதிப்படி குழைத்து அணியப்பெறும் திருநீற்றின் புனிதம் போன்று உள்ளத்திலும் புனிதத் தன்மையுடையவர்களாக திருக்கூட்டத்தினர் விளங்கினார்கள். உடல் தோற்றத்தில் காணப்படும் தூய்மை உள்ளத்திலும் காணப்படுவதாக அடியார்களின் உடலழகு சித்திரிக்கப்படுகின்றது. இவ்வாறு தூலமான உடலழகை தூலமற்ற பண்புகளாக வர்ணிப்பது பெரியபுராணத்தில் காணப்படுகின்ற சிறப்பம்சமாகும். எதிர்மறையாக தூலமற்ற பண்பைத் தூலமான உடலழகாக உருவகப்படுத்துவதையும் காணலாம். உதாரணமாக, மூர்த்தி நாயனாரைப் பற்றிக் குறிப்பிடும்போது "அன்பு எனும் மூர்த்தி" என்று அன்பு எனும் திருவுருவமாக அவருடைய உடலை உருவகப்படுத்துகின்றார்.

திருமணம் என்பது இளமையின் தேவைகளை நிறைவேற்றும் ஒரு இன்றியமையாத சடங்காகும். திருமணக்கோலம் இளமை அழகை வெளிப்படுத்தும் வகையில் செய்யப்படுவது. சுந்தரர், சம்பந்தர் ஆகியோரின் திருமணக்கோலத்தைச் சேக்கிழார் சித்திரிக்கின்றார். நறுமணம் உடைய அழகிய பட்டாடை, ஒப்பனை செய்வதில் வல்லவன் ஒருவனால் ஈரத்தைப் போக்கி உலரச் செய்து கைவிரல் நகத்தைக்கொண்டு சிக்கறுத்து அழகுற முடிக்கப்பட்ட தலைமயிர், நறுமணம் மிகுந்த பச்சைக் கற்புரக் கலவையில் பனிநீர் கூட்டிச் சந்தணம் சேர்த்துக் குழம்பாக்கிக் கஸ்தூரிச் சாந்து தோய்த்த வாசனைக் கலவை பூசிய மேனி, பால் போன்ற வெண்மையான முப்புரி நூல் பூண்ட மார்பு, கையில் பொன் மோதிரம் ஆகிய அழகம்சங்கள் பொருந்தியதாகச் சுந்தரருடைய திருமணக்கோலம் சித்திரிக்கப் படுகின்றது. திருமணம் முடிந்த பின்பு திருக்கோயிலுக்குள் சென்ற சுந்தரரின் தோற்றம் இவ்வாறு சொல்லப்படுகின்றது.

**"கையினில் புனைபொன் கோலும்
காதினில் இலங்கு தோடும்
மெய்யினில் துவளும் நூலும்
நெற்றியில் விளங்கும் நீறும்
ஐயனுக்கு அழகிதாம் என்று
ஆயிழை மகளிர் போற்றச்
சைவமெய்த் திருவின் கோலம்
தழைப்ப வீதியினைச் சார்ந்தார்"**

***(331:1-8)***

இங்குக் கையினில் அழகிய பொற்பிரம்பு, செவியில் தோடு, திருமேனியில் இனிது விளங்கும் முப்புரி நூல், நெற்றியில் வெள்ளொளியுடன் விளங்கும் திருவெண்ணீறு ஆகியவற்றுடன் காணப்பட்ட சுந்தரருடைய தோற்றத்தைச் "சைவத்தின் மெய்க்கோலம்" என்று சேக்கிழார் குறிப்பிடுகின்றார்.

அதேபோல சம்பந்தருடைய திருமணக்கோலம் திருநீறு, முழுமையான ஆடை, அணிகலன்கள், மலர்கள் என்பவற்றால் அழகுபடுத்தப்பட்டதாக எடுத்துக்காட்டப்படுகின்றது. சேக்கிழார் இளமையின் திருமணக் கோலத்தைப் பக்திநிலையாக எடுத்துக்காட்டுவது குறிப்பிடத்தக்கதாகும்.

சேக்கிழார் குறிப்பிடுகின்ற வைதிகம் தனது உண்மைக்கொள்கை காட்ட விளைந்த வடிவமும், சைவத்தின் மெய்க்கோலமுமே அவரது மனித உடலழகு பற்றிய கொள்கையாக இருக்க வேண்டும். ஏனெனில் அவ்வடிவங்களின் அடிப்படையிலேயே சில அடியார்களின் உடல் தோற்றம் எடுத்துக் காட்டப்படுகின்றன.

பெரியபுராணத்தில் சித்திரிக்கப்படுகின்ற அடியார்களில் பெரும்பாலானோர் ஆண்களாவர். இவர்கள் வாழ்ந்த இடம் இயற்கை வளங்களோடும் பிரதேசச் சிறப்புக்களாலும்

வர்ணிக்கப்படுகின்றது. அவர்களில் அறுவரைத் தவிர மற்றையோருடைய குலம் சொல்லப் படுகின்றது. அவர்களை ஆட்கொண்ட சிவபெருமானின் திருக்காட்சிகள் மிகச் சிறப்பாக வர்ணிக்கப்படுகின்றன. அவ்வகையில் அடியார்களுடைய உடலழகைப் பேசுவதற்கு சேக்கிழார் கொடுத்த முக்கியத்துவம் மிகக்குறைவாகும். சில அடியார்களின் உடலழகு பேசப்படுவதற்கான தேவை தெளிவான கதை முழுமையை ஏற்படுத்து வதற்கானசந்தர்ப்பத்தால் தோன்றியதாகும். திருநாவுக்கரசர் சமண சமயத்தில் ஆட்பட்டு சைவ சமயத்தைத் தழுவியவர். அவருடைய உடல் தோற்றத்தை தூய்மையுடைய திருவெண்ணீற்றினை நிறைய அணியப் பெற்ற பொன்மேனியும், உருத்திராட்ச மாலை கழுத்தில் தொங்க விளங்கும் பாங்கும், சிவபெருமான் திருப்பாத மலர்களையே சிந்திக்கும் திருமனமும், அதன்வழி உளம் கசிந்துருகப் பேரன்பால் நீர் கசியும் கண்ணும், தேவாரத் திருப்பதிகத்தை வழங்கும் செம்மை மேவிய திருவாயும், கையில் உழவாரமும் உடையவராகச் சித்திரிக்கிறார். அதேநேரம் சமணசமயத்தைச் சார்ந்திருந்ததால் அவருடைய உடம்பு இழிவுபட்டுவிட்டது என்றும் அவ்விழிவு தீர சூலமும் இடபக் குறியும் தனக்குத் தரிக்குமாறு சிவபெருமானிடம் வேண்டினார் என்றும் அவ்வாறே நாயனாரின் தோழில் உயர்ந்த மூன்று இலைகளையுடைய சூலமும் இடபமும் சேர்ந்த முத்திரையைச் சிவபெருமான் சாத்தினார் என்றும் திருநாவுக்கரசர் வரலாறு சொல்லப்படுகின்றது.

புலையர் குலத்தில் பிறந்த திருநாளைப் போவார் சிவாலயங்கள் தோறும் பேரிகை முதலிய தோற்கருவிகளுக்குரிய தோலும் வாரும் வீணைக்கும் யாழுக்கும் நரம்பும் அர்ச்சனைக்குக் கோரோசனையும் கொடுப்பதைத் தனது திருப்பணியாகச் செய்தார்.

**"பிறப்பின் வழிவந்த**
**அறம்புரிகொள் கையினராய்**
**அடித்தொண்டின் நெறிநின்றார்"**

**(1057:6-8)**

என்று திருநாளைப்போவார் தன் இயல்பான பிறப்பின் தன்மைக்குரிய சிவதருமங்களைச் செய்து அடிமைத்தொண்டு புரிந்து வந்ததைச் சேக்கிழார் குறிப்பிடுகின்றார். அந்நிலையில் அவருடைய இயல்பான உடல் தோற்றம் சுட்டப்படவில்லை. ஆனால் அந்தணர்கள் மூட்டிய தீயில் அவர் மூழ்கியவுடன் பொய்த்தகைமையுடைய வடிவம் ஒழிந்து புண்ணிய மாமுனிவர் வடிவம் கொண்டவராய் திருமேனியில் முப்புரிநூலும் தலையில் சடை முடியும் கொண்டு அத்தீக்குழியிலிருந்து வெளிவந்தார் என்றும் செந்தாமரை மலரிலிருந்து தோன்றும் பிரமன் போன்று காட்சியளித்தார் என்றும் சேக்கிழார் வர்ணிக்கின்றார். ஆக, புலையர் குலத் தோற்றம் பொய்த்தகைமையுடையது என்பதும் அப்பொய்த்தகைமை அந்தணர் மூட்டிய தீயில் மூழ்கியவுடன் நீங்கியது என்பதும் மாமுனி வடிவம் புனித வடிவம் என்பதும் சேக்கிழாரின் நிலைப்பாடாக உள்ளது.

சண்டேசுர நாயனார் அந்தணர் குலத்தில் தோன்றியவர். பசு மேய்க்கும் சிறுவன் அவற்றை அடித்து மேய்ப்பதைப் பொறுக்காத நாயனார் தானே அவற்றை மேய்க்க முன்வந்தார்.

**"கோலும் கயிறும் கொண்டு குழைக்**
**குடுமி அலையக் குலவுமான்**
**தோலும் நூலும் சிறு மார்பில்**
**துவள அரைக்கோவணம் சுடர"**

**(1235:1-4)**

பசுக்களை மேய்த்தார் என்று சேக்கிழார் குறிப்பிடுகின்றார். அந்தணர் குலத்தில் பிறந்தவர் ஆயர் குலத்தொழில் செய்ய நேர்ந்ததால் இத்தகைய உடலழகு

கூறப்பட்டிருக்கின்றது. கோல், கயிறு ஆகிய அணிகலன்கள் ஆயர் குலத்திற்கே சிறப்பாக உரியவை. முப்புரி நூல் அந்தண குலத்துக்குச் சிறப்பாக உரியது. அந்தண குலத்தைச் சேர்ந்த 12 அடியார்களையும் முப்புரி நூல் அணிந்தவர்களாகப் பெரியபுராணம் சித்திரிப்பது குறிப்பிடத்தக்கது. ஆகவே நாயனாரின் உடலழகில் இவ்விரண்டும் இணைவதைக் காணலாம். அதேநேரம் ஆயர் குலத்தில் தோன்றியராகச் சொல்லப்படுகின்ற ஆனாய நாயனாருடைய வரலாற்றில்,

**"ஆயர் குலத்தை விளக்கிட**
**வந்துதயம் செய்தார்**
**தூய சுடர்த்திரு நீறு**
**விரும்பு தொழும்பு உள்ளார்"** *(939 :1-4)*

என்றவாறு உடலழகு சொல்லப்படுகின்றது. அழகிய உறுதியான நெற்றியின் மீது பூசப்பெற்ற திருநீற்றின் ஒளியானது கண்டோரைக் கவரச் செய்யவும் அரையில் மரபுரியோடும் கையில் கோலுடனும் ஆனாயர் பசுக்களை மேய்த்தார் எனச் சேக்கிழார் பாடுகின்றார்.

ஆகவே, சமண சமயத்தைத் தழுவியதால் இழிவுபட்டுவிட்ட திருநாவுக்கரசரின் உடம்பு சிவபெருமான் சிவ அடையாளங்களைப் பொறித்ததால் தூய்மையடைந்தது என்பதும், பொய்த்தகைமையுடைய புலையர் குலத் தோற்றம் அந்தணர் மூட்டிய தீயில் மூழ்கியவுடன் பொய்மை நீங்கி புண்ணிய மாமுனி வடிவம் பெற்றமை என்பதும் அந்தணர் குலத்தைச் சேர்ந்தவராயினும் ஆயர் குலத்தைச் சேர்ந்தவராயினும் பசுக்களை மேய்க்கும் சந்தர்ப்பத்தைக் கூறும்போது அவர்களது உடலழகைச் "சைவத்தின் திருக்கோலம்" ஆகக் காட்ட முயற்சிப்பதும் மனித உடலழகு பற்றிய சேக்கிழாரின் கொள்கையை மேலும் தெளிவுபடுத்துகின்றது.

பெரியபுராணத்தில் கூறப்படும் அடியார்களில் ஆண்களுடன் ஒப்பிடும் போது பெண் அடியார்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகும். இதில் 28 பெண்களைப் பற்றிக் குறிப்பாகச் சொல்லப்படுகின்றது. அதில் 21 பேர் நாயன்மாரது மனைவியர். தாயார் நால்வர். மகள்மார் இருவர். உடன்பிறப்பு ஒருவர். இவர்களில் இசை ஞானியார், காரைக்காலம்மையார், மங்கயர்க் கரசியார் ஆகிய மூவரே அடியார் வரிசையில் குறிப்பிடப்படுகின்றனர். ஆயினும் அடியாராகக் குறிப்பிடப்படும் பெரும்பாலான ஆடவர் வாழ்வில் பெண்கள் பங்கெடுக்கின்றனர். அவர்களுடைய உதவி இல்லாமல் அவர்கள் திருத்தொண்டர்களாகச் சிறக்க முடியாது என்று கூறுமளவிற்கு இணைந்து தொண்டாற்றியுள்ளனர்.

பெரியபுராணத்தில் கூறப்படும் அடியார்களுடைய அழகுநிலைப்பட்ட தோற்றங்களைச் சித்திரிப்பதற்குச் சேக்கிழார் கையாளும் தொடர்கள் முக்கியமானவை. உதாரணமாக,"வண்ணமலர்க் கருங்கூந்தல் மடக்கொடி" (பரவையார்), "இன்தொண்டைச் செங்கனிவாய் இளங்கொடி" (பரவையார்), "தேனமலர் கமலப்போதில் திருவினும் உருவம் மிக்கார்" (நீலகண்டர் மனைவி), "கற்பின் மேம்படு காதலி விதி மணக்குல மடந்தை" (இயற்பகை மனைவி), "இல்லிகவாப் பருவம்" (புனிதவதி), "பூங்குழலார்" (புனிதவதி), "மணம் மலியும் மலர்க்கூந்தல்மாது" (புனிதவதி), "நறுங்கூந்தல் அன்னம்" (புனிதவதி), "வளைக்கைமானி" (மங்கயர்க்கரசியார்), "தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை" (மங்கயர்க்கரசி), "பருங்கையானை வாழ் வளவர்கோன்பாவை"(மங்கயர்க்கரசியார்), "செந்திரு அனைய கன்னி" (சடங்கவி), "செம்மலர்மேல் திருவனைய திலகவதி" (திலகவதி) போன்ற தொடர்கள் குறிப்பிடத் தக்கவையாக உள்ளன. இத்தொடர்கள் பெண்களின் இளமையையும் அழகையும் சிறப்பாகக் கூந்தல் அழகைக் கூறுவனவாக உள்ளன.

பெரியபுராணத்தில் ஒப்பற்ற நாயகனாகச் சித்திரிக்கப்படுகின்ற சுந்தரருடைய காதலியான பரவையாரின் உடல் அழகைச் சேக்கிழார் சிறப்பாகச் சித்திரிக்கின்றார். சுந்தரருடைய எண்ணங்களாக இவற்றை வெளிப்படுத்து கின்றார். மேகம் போன்ற கருமையுடைய கூந்தலும் வில் போன்ற புருவமும் குவளை மலர் போன்ற கண்ணும் பவளம் போன்ற வாயும் முழு நிலவு போன்ற முகமும் நறுமணம் கமழும் தாமரை மலர் போன்று விளங்கச் செய்யும் கொடி போன்ற இடையும் கொண்டவளாக பரவையார் சுந்தரரின் எண்ணத்தில் தெரிகின்றார். இவ்வாறு அழகாகத் தெரிகின்ற தோற்றம் இறைவனுடைய அருளே எனவும் அவர் எண்ணுகின்றார். இருவரது மனநிலையையும் சிற்றின்பத்திற்கும் அப்பால் இறையருள் சார்ந்ததாகச் சேக்கிழார் விளக்குகின்றார்.

இவ்வாறு சுந்தரர் - பரவையார் காதலை தெய்வத் துணையுடன் இயைபுறுத்த எண்ணிய சேக்கிழார் ஆண்களின் காமத்தை வெளிக்காட்டும் பாங்கிலும் பெண் உடல் அழகை எடுத்துக் காட்டியுள்ளார்.

**“பேர் பரைவை பெண்மையில் பெரும் பரவை விரும்பல்குல்**
**ஆர் பரவை அணிதிகழ் அணிமுறுவல் அரும்பரவை**
**சீர்பரவை ஆயினாள் திருவுருவின் மெய்சாயல்**
**ஏர்பரவை இடைப்பட்ட என் ஆசை எழுபரவை”**

இங்கு “அல்குல்” பற்றிய நினைப்பும் “ஆசை” பற்றிய குறிப்பும் சுந்தரரின் காம வேட்கையைக் காட்டுவனவாக உள்ளன.

இளமையையும் அழகையும் துறந்து பேய் வடிவு பெற்றுத் தன் கணவன் வேறொரு பெண்ணுடன் இல்லறம் நடத்த வழிவகுத்த அன்புநெறியை எடுத்துக்காட்டுவதாகக் காரைக்காலம்மையார் புராணம் உள்ளது. புனிதவதி என்ற இயற்பெயருக்குரியவரான காரக்காலம்மையார் உடற்கூற்று அறிஞர்கள் உரைக்கும் சிறப்புடைய அழகின் தன்மைகள் யாவும் நிரம்பி விளங்கும் மாட்சிமையில் திருமணப்பருவம் அடைந்தார் என்பதை,

**“நல்லவென உறுப்புநூல்**
**அவர் உரைக்கும் நலம்நிரம்பி**
**முல்கு பெரு வனப்புமீக்**
**கூரவரு மாட்சியினால்**
**இல்இகவாப் பருவம்”** *(1727 :1-5)*

என்று சேக்கிழார் குறிப்பிடுகின்றார். திருமணப்பருவத்துக்கான உடல்நலன்கள் யாவும் பொருந்தியவளாகப் புனிதவதியார் காணப்பட்டார் என்பதை ஆரவாரமின்றிச் சொல்கின்றார். அவளது பாலியல் அங்கங்கள் பற்றிய எந்தவொரு வெளிப்படுத்தல்களுமின்றி திருமணம் முடியும் வரை அவளது உடலழகைச் சொல்கின்றார். புனிதவதியின் தெய்வநிலையை உணர்ந்த அவளது கணவன் பரமதத்தன் வாணிகத்தின் பொருட்டு வெளியிடம் சென்று வேறு திருமணம் செய்து குழந்தையும் பெற்றுக்கொண்டு சொந்த இடத்துக்கு வருகின்றான். அப்போது புனிதவதியை அவனிடம் கூட்டிச்செல்ல உறவினர்கள் ஆயத்தமான சந்தர்ப்பத்தில் “கொம்மை வெம்முலையினாள்” *(1762:7)* என்று அவளைச் சேக்கிழார் வர்ணிக்கின்றார். ஆக, பரமதத்தனுடன் வாழ்வதற்கு தெய்வத் தன்மை மட்டுமே தடையாக இருந்தது என்பதைச் சொல்வதற்காகவே இத்தகைய வர்ணனையைச் சேக்கிழார் கையாண்டுள்ளார். கணவனுக்குப் பயன்படாத உடம்பும் அழகும் பயனற்றவை எனக்கருதி,

**“ஊனுடை வனப்பை யெல்லாம்**
**உதறி என்பு உடம்பே ஆக**
**வானமும் மண்ணும் எல்லாம்**
**வணங்கு பேய் வடிவம்”**

பெற்ற காரைக்காலம்மையாரின் கற்புடைமையைப் பெரியபுராணம் வெளிப்படுத்துகின்றது. இளமையும் அழகும் அழிந்த இவ்வடிவம் சுடுகாட்டிலும் தனியிடங்களிலும் நடமாடவும் வேண்டிய நேரத்தில் இறைவனைப் பாடவும்

இறையருளில் மூழ்கவும் வசதியானது. திலகவதியாரும் தாயும் தந்தையும் இறந்த பின்பும் கணவன் போரில் மாண்ட பின்பும் அழகுக்கு அணிகலனாக விளங்கும் மங்கல நூல் முதலியவற்றைத் தரிக்காது வாழ்ந்தார். எனவே சாதாரண மனித உருவம் இறை வழிபாட்டுக்கு உகந்ததல்ல என்ற ஒரு செய்தியையும் பெரியபுராணம் தருகின்றது. பெண் உடல் அழகு பற்றித் தமிழ் இலக்கியங்களில் அதிகமாக வர்ணிக்கப் பட்டிருக்கின்றது. அவ்வர்ணனைகளில் சிருங்காரச் சுவை மேலோங்கியிருக்கும். பெரியபுராணம் அதன் இயல்பான போக்கில் பெண்களுடைய உடலழகை தெய்வநிலைப்பட்ட பண்புகளோடு வர்ணிப்பதற்கே முக்கியத்துவம் கொடுக்கின்றது. ஆயினும் உலகியல் யதார்த்தத்தைச் சொல்ல வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படுகிற போது பெண்களின் பாலியல் அங்கங்கள் பற்றிய வர்ணனையை நுணுக்கமாகச் செய்கிறார். அவ்வர்ணனை ஒரு செய்யுளுக்குள்தானும் நீண்டு செல்லாமல் சொற்களாக, தொடர்களாக முற்றுப்பெற்றுவிடுகின்றன. தவிர, சுந்தரர், கண்ணப்பர் ஆகிய நாயன்மார்களின் குழந்தைப் பருவத்து உடலழகையும் சேக்கிழார்சித்திரித்திருக்கிறார்.ஐம்படைத்தாலியும் சதங்கையும் பொன்னாலான அரைஞாணும் அணிவித்து சுந்தரரைப் பெற்றோர் வளர்த்ததை,

> **"ஐம்படை சதங்கை சாத்தி**
> **அணிமணிச் சுட்டி சாத்தி**
> **செம்பொன் நாண் அரையில் மின்ன"**
> ***(150:5-7)***

என்று சேக்கிழார் குறிப்பிடுகின்றார். அதேபோல வேடர் குலத்தில் தோன்றிய கண்ணப்பரின் குழந்தைப் பருவத்தை,

> **"கருங்கதிர் விரிக்கும் மேனிக்**
> **காமரு குழவி தானும்**
> **இரும்புலிப் பறழின் ஓங்கி**
> **இறவுளர் அறவே"** ***(665:1-4)***

என்று குறிப்பிடுகின்றார். கருமை விளங்கும் ஒளி பொருந்திய அழகிய திருமேனியோடும் யாவரும் விரும்பத்தக்க விதத்திலும் அக்குழந்தை பெரிய புலிக்குட்டி போன்று விளங்கியது. ஓராண்டு கடந்த நிலையில் தளர்ச்சியான நடை நீங்கிச் சிறுநடைப் பருவம் வர, புன்மையான மயிர்களையுடைய தலையில் பொன் புண் அணியப்பட்ட புலி நகத்தாலான சுட்டியைச் சாத்தி, சினந்த முள்ளம் பன்றியின் முள்ளை அரிந்து இடையிடையே கோத்துப் பொன் கயிற்றில் புலிப்பல் கோத்து மார்பில் தவழும் மாலையாகச் சாத்தினார்கள். அத்தோடு பசுமையான ஒளி வீசும் மரகத மணியோடு பல வகையான மணிகளும் சேர்ந்து சதங்கையாக அரையில் ஒலித்து ஆரவாரம் செய்ய செப்புக் காசுடன் புனையப்பட்ட தாயத்தையும் அரைஞாணில் சேர்த்து ஒளிமிக்க யானைத் தந்தத்தாலான தண்டைக் காலில் விளங்கக் காதணியாக மாணிக்கத்தாலான அணிகலன் ஒளிர்ந்து தொங்கத் திண்ணனார் கண்டோரின் பிறவிப் பிணி தீர்க்கும் அருள் வண்ணம் கொண்டு தெருவீதியில் விளையாடலானார்.

தமிழ் இலக்கியங்களில் மனித உடல் வர்ணிக்கப்படுகிறபோது முக்கியமாக அது நலமானதாகவும் வளமானதாகவும் இளமையும் வலிமையும் உடையதாகவுமே வர்ணிக்கப்படுகிறது *(தி.சு.நடராசன், 2016:123)*. பெரியபுராணம் கட்டமைக்கின்ற அடியார்களுடைய உடலழகும் இப்பண்புகளிலிருந்து முழுமையாக அந்நியப்பட முடியாது. ஆனால் பெரியபுராணம் எழுந்த சூழலில் முக்கியமாக அவைதிக-வைதிகப் போட்டியில் வைதிக நெறி சார்ந்த குறிப்பாகச் சைவ சமயம் சார்ந்த அடியார்களின் உடல் அழகை ஒரு கட்டுக்கோப்புக்குள் கொண்டுவரும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது எனலாம். ஏனெனில் உடலழகு என்பது ஓர் இனத்தின் அல்லது குழுமத்தின் அழகு பற்றிய பார்வையையும் அல்லது அடையாளத்தையும் காட்டுவதாகும் *(தி.சு.நடராசன், 2016:123)*. இவ்வகையில்

பெரியபுராணம் மனித உடல் அழகை திருநீறு, உருத்திராட்சம், முப்புரி நூல், சடைமுடி, வெண்மையான ஆடை, கந்தையான ஆடை ஆகியவற்றோடு எளிமையாகக் காட்சிப்படுத்துகின்றது. மாமுனி வடிவத்தையும் பேயுருவத்தையும் இறைவனோடு நெருங்குவதற்கான அசாதாரண வடிவங்களாகக் கொள்கிறது.

வைதிக சமயத்தோடு போட்டியிட்டு நின்ற அவைதிக சமயங்களுள் முக்கியமானது சமண சமயமாகும். வேத வேள்வியை ஏற்றுக்கொள்ளாது நிந்தனை செய்தல் என்ற விதத்திலும் பிறப்பினால் மக்களுள் வேறுபாடு காணாமை என்ற வித்திலும் வைதிக சமயத்திலிருந்து சமண சமயம் வேறுபடுகின்றது. காலப்போக்கில் பிறப்பினால் மக்களுள் உயர்வு தாழ்வு உண்டு என்பதைச் சமண சமயத்தார் ஏற்றுக்கொண்டார்கள் (எஸ். வையாபுரிப்பிள்ளை, 1957: 85). இத்தகைய போட்டிச் சூழலில் சைவ சமயம், பெரியபுராணத்தினூடாகத் தனது கொள்கைகளை நெகிழ்ச்சிப்படுத்த முனைகிறது. ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல மனிதரின் உடலழகு பற்றிய நியமங்களைப் பெரியபுராணம் உருவாக்க முனைகிறது. அந்நியமங்களினூடாக பிறப்பினாலுண்டான மக்களிடையேயான ஏற்றத்தாழ்வுகளைக் களையவும் முனைகிறது.

**உசாத்துணை நூல்கள்**

1. இராமசுப்பிரமணியம் வ. தா. (2002). *பெரியபுராணம் (தொகுதி - 1,2,3,4)*, திருமகள் நிலையம், சென்னை.
2. கைலாசபதி, க. (1996), *"புலைப்பாடியும் கோபுர வாசலும்", அடியும் முடியும் - இலக்கியத்திற் கருத்துக்கள்*, குமரன் பப்ளிசுர்ஸ், சென்னை.
3. சந்திரலேகா வாமதேவா. (1998). *"காரைக்காலம்மையாரும் அவர் பாடிய பிரபந்தங்களும் - ஓர் ஆய்வு", (சிந்தனை: தொகுதி - 3, இதழ் - 1)*, கலைப்பீடம், யாழப்பாணப் பல்கலைக்கழகம்.
4. திலகவதி. (2004). *"தமிழ் இலக்கியத்தில் பெண்"*, ஏ.எஸ். மணி, இலக்கியக் கட்டுரைகள், பாவை பப்ளிசர்ஸ், சென்னை.
5. நம்பி ஆரூரன், கு. (1994). *"தாரா சுரத்திலுள்ள பெரியபுராணச்சிற்பங்கள்: ஓர் ஆய்வு"*, ஔவை நடராசன், தமிழ்க்கலை விருந்து, தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம்.
6. நடராசன், தி.சு. (2016). தமிழ் அழகியல் - மரபும் கோட்பாடும், சென்னை: பாவை பிரிண்டர்ஸ்.
7. பிலவேந்திரன், ச. (2001). *தமிழ்ச் சிந்தனை மரபு*, சென்னை: லக்ஸ்மி சுந்தரம்".
8. மனோன்மணி சண்முகதாஸ். (2010). *லலீசன் (தொகுப்பாசிரியர்கள்). பெரிய புராணம் காட்டும் வாழ்வியல்*, கொழும்பு - குமரன் புத்தக இல்லம், சென்னை
9. வெள்ளைவாரணன். (1969). *பன்னிரு திருமுறை வரலாறு (இரண்டாம் பகுதி)*, அண்ணா பல்கலைக்கழகம்.
10. வையாபுரிப்பிள்ளை, எஸ். (1957). காவிய காலம், மதுரை.